நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வரத்து குறைவு: வெங்காயம் விலை உயர்வு**

First Published : 31 May 2011 11:46:10 AM IST

திண்டுக்கல், மே 30: வரத்து குறைவு காரணமாக, திங்கள்கிழமை சின்ன வெங்காயத்தின் விலை ஏற்றம் அடைந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும், உடுமலை, திருப்பூர், ஆண்டிபட்டி, விளாத்திகுளம் மற்றும் மைசூர் பகுதிகளில் இருந்தும், திண்டுக்கல் வெங்காய மண்டிக்கு விற்பனை மற்றும் ஏற்றுமதிக்காக வெங்காயம் வருவது வழக்கம்.

தற்போது, உள்ளூரில் விளைச்சல் முடிவுக்கு வந்துள்ளது. இந்நிலையில், உடுமலைப்பேட்டையில் இருந்து திண்டுக்கல் மண்டிக்கு 5 ஆயிரம், 6 ஆயிரம் மூட்டைகளில் வந்து கொண்டிருந்த வெங்காயம், இப்போது 3 ஆயிரம் மூட்டைகள் மட்டுமே வருகிறது.

இதனால், கடந்த வாரம் கிலோ ரூ. 16 முதல் ரூ. 19 வரை விற்பனையாகி வந்த சின்ன வெங்காயம், தற்போது ரூ. 23 அளவுக்கு உயர்ந்துள்ளது.

இது குறித்து, திண்டுக்கல் வெங்காயப் பேட்டையில் மண்டி நடத்தி வரும் வி. ராஜேந்திரன் கூறியதாவது:

உள்ளூர் விளைச்சல் குறைந்து போனதால், தற்போது சின்ன வெங்காயம் உடுமலைப் பேட்டையிலிருந்து வநது கொண்டிருக்கிறது.

இந்த வரத்தும் குறையும்போது, மைசூர், திருப்பூர், ஆண்டிபட்டி, விளாத்திகுளம் ஆகிய பகுதிகளிலிருந்தும் வெங்காயம் இறக்கப்படும்.

விலையேற்றம் என்பது தாற்காலிகமானதுதான்.

வரும் ஜூன் மாதம் 10-ம் தேதி முதல் மைசூரிலிருந்து வெங்காயம் வரத் தொடங்கும். அப்போது, விலை குறையும் என்றார் அவர்.

**வருசநாடு வனப்பகுதியில் 30,000 மரக்கன்றுகள் நடத் திட்டம்**

First Published : 31 May 2011 11:37:55 AM IST

ஆண்டிபட்டி, மே 30: வருசநாடு வனப் பகுதியில் வன வளத்தை அதிகரிக்க வனக் குழுக்களைக் கொண்டு 30,000 மரக்கன்றுகளை நட முடிவு செய்திருப்பதாக வனச் சரகர் சண்முகவேல் கூறினார்.

வருசநாடு வனப் பகுதியில் பஞ்சந்தாங்கி, மஞ்சனூத்து வடக்கு, தெற்கு, அரசரடி வடக்கு, தெற்கு, உடங்கல், தும்மக்குண்டு வடக்கு, தெற்கு, சந்தனக்காவு என 9 வனப் பகுதிகள் உள்ளன. இப் பகுதியில் 4 வனக் குழுக்கள் உள்ளன, குழுவுக்கு 20 பேர் உள்ளனர். இவர்களின் பணி வன வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் வனத்தில் உள்ள பணிகளைச் செய்தலாகும். இவர்களைக் கொண்டு சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 30,000 மரக்கன்றுகளை நட முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு மரக்கன்றுகளை நடுவதன் முலம் மண் அரிமானத்தைத் தடுக்கவும், விலங்குகளின் இருப்பிடத்தை அதிகரிக்கவும், மேலும் விலங்குகளுக்குத் தேவையான உனவுகளை அதிகரிக்கச் செய்வதாகும்.

அதன்படி, மூங்கில், தேக்கு, ஈட்டி, வெக்காளி, வேங்கை என பலவகையான மரக் கன்றுகளை மயிலாடும்பாறை வன அலுவலகத்தில் வைத்து பாதுகாத்து வருகிறோம். மழைக் காலங்கள் ஆரம்பித்தவுடன், வனக் குழுக்களை வைத்து வனப் பகுதியில் நடவு செய்யப்படும் என்றார்.

**மதுரையில் முதல் போகம் நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2011,00:00 IST




தற்போது "ராஜராஜன் 1000' என்ற நவீன நெல் சாகுபடி என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். விவசாயிகள் தற்போது இந்த நவீன முறையை அனுசரித்து சாகுபடி செய்ய

வேண்டும். இந்த முறையில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது வயலை மேடு பள்ளம் இல்லாமல் தயார் செய்வதாகும். ஏனென்றால் விவசாயிகள் 14 நாட்கள் வயதுடைய இளம் நாற்றினை நட வேண்டிஉள்ளது. ஒரு ஏக்கர் சாகுபடிக்கு மூன்று கிலோ விதை நெல் போதுமானது. விதையினை உப்புக் கரைசல் நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

100 கிராம் சமையல் உப்பினை 10 லிட்டர் நீரில் கலந்து, இதில் விதைகளை இட்டு மிதக்கும் விதைகளை நீக்கி, அமிழ்ந்து இருக்கும் நல்ல விதைகளை மட்டும் எடுத்து தண்ணீரில் கழுவி விதையை பயன்படுத்தலாம். அடுத்து பாய் நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும்.

இதனை நடவு வயலின் அருகிலோ, அல்லது வயலின் ஓரத்திலோ அமைக்கலாம். ஒரு ஏக்கர் நடவிற்கு 40 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள ஒரு சென்ட் நாற்றங்கால் தேவை. மண்ணின்கீழே பாலிதீன் பேப்பர் போட்டு விதை சட்டம் உபயோகித்து நாற்று நடவேண்டும்.

ஒரு விதைச்சட்டத்திற்கு 50 கிராம் வீதம் விதை போடவேண்டும். நாற்றங்காலுக்கு அடியுரமாக தொழு உரம் இடவேண்டும். ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 2 கிலோ டிஏபி உரம் இடலாம். நாற்றங்காலில் நாற்றுக்கள் போதிய வளர்ச்சி பெற்றிருக்கவில்லையெனில் விதைவிட்ட 9ம் நாள் 50 கிராம் யூரியாவினை 10 லிட்டர் நீரில் கரைத்துக்கொண்டு கரைசலை நாற்றுக்கள் மேல் தெளிக்கலாம். நடவு வயலுக்கு ஏற்ற இயற்கை, செயற்கை உரங்களை இடலாம்.

அடுத்து மார்க்கர் கருவி உபயோகிப்பது பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். நடவு வயலில் 25 து 25 செ.மீ. இடைவெளியில் ஒற்றை நாற்று மேலாக சதுர நடவு மேற்கொள்ளும் வகையில் அடையாளம் இடும் கருவியை பயன்படுத்தி நடவு செய்ய வேண்டும். இதனால் போதிய அளவு காற்றோட்டம், சூரிய வெளிச்சம் நாற்றுக்கு கிடைக்கிறது. மேலும் கோனோ களை எடுக்கும் கருவி கொண்டு குறுக்கும் நெடுக்கும் களையினை அழுத்தி அழிக்க ஏதுவாக உள்ளது.

**கோனோ களை கருவி**: இக்கருவியினை நடவு செய்த 10ம் நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை குறுக்கும் நெடுக்குமாக பயன்படுத்த வேண்டும். இவ்வாறு களைக் கருவியை பயன்படுத்துவதால் ஒவ்வொரு முறையும் சுமார் ஒரு டன் அளவிற்கு களைகள் அமுக்கப்பட்டு பசுந்தாள் உரமாக மாற்றப்படுகிறது. இதன்மூலம் மண்ணில் அங்ககப் பொருளின் அளவு அதிகரிக்கின்றது. மேலும் மண்ணில் அதிக காற்றோட்டம் ஏற்பட்டு வேர் வளர்ச்சி அதிகரிக்கின்றது.

**நீர்ப்பாசனம்:** புதிய பெயர் கொண்ட நெல் சாகுபடி முறையில் நீர்ப்பாசனம் செய்யும்பொழுது

சாதாரண சாகுபடி முறையைவிட பாதி அளவு நீரே போதுமானதாகும். முதலில் பாய்ச்சப்பட்ட நீர் மறைந்து சிறு கீறல்கள் தோன்றும் நிலையில் மீண்டும் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனால் மண்ணின் நுண் உயிர்களின் வளர்ச்சி அதிகரித்து அதன் செயல்பாடுகள் அதிகரிக்கின்றது.

மேலும் மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து வேர் வளர்ச்சி அதிகரிப்பதால் நாற்று நன்கு தூர்கட்டி வளர்கிறது. புதிய பெயர் கொண்ட நெல் சாகுபடி முறையில் 25 செ.மீ. இடைவெளியில் மேலாக நடப்பட்ட ஒற்றை நாற்றிலிருந்து 35-40 வாளிப்பான பக்கத் தூர்கள் வெளிவருகின்றன.

இது சாதாரண நடவைவிட மூன்று மடங்கு அதிகமானது ஆகும்.
புதிய முறையில் பயிருக்கு மேலுரம் இடுவது முக்கியம். இதற்கு இலை வண்ண அட்டையைப் பயன்படுத்த வேண்டும். விவசாய இலாகா அதிகாரிகள் உதவியோடு இப்பணியை செய்யலாம். இந்த சீசனுக்கு ஏற்ற ரகங்களை விவசாயிகள் தேர்ந்தெடுத்து உபயோகிக்க வேண்டும். ஆடுதுறை 36, ஆடுதுறை 45, ஆடுதுறை 47 மற்றும் 100 நாள் நெல் ஜே-13 இவைகளை சாகுபடி செய்யலாம்.
**-எஸ்.எஸ்.நாகராஜன்**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2011,00:00 IST



**மங்கல மஞ்சள்**: தூய மஞ்சள் விதைகளிலிருந்து பெறப்பட்ட மஞ்சள் நாற்றுக்களைக் கொண்டு விதைமூலம் இனப்பெருக்கம் செய்யும் உற்பத்தியைக் கையாண்டு கண்டுபிடிக்கப்பட்ட இருவேறு புதிய மஞ்சள் ரகங்களில் "பிரதிபா' என்ற மஞ்சள் ரகம் தனித்தன்மை வாய்ந்தது. "பிரபா' என்ற மற்ற மஞ்சள் ரகம் பிரதிபாவின் இரட்டைப் பிறவியாகக் கொள்ளப் படுகிறது.
பிரபாவும், பிரதிபாவும் தாய்மஞ்சள் செடியிலிருந்து மேற்கொண்டு விதைத் தெரிவு முதல் முளைப்புத்திறன், பெருக்கம் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் மிகுந்த நுணுக்கமான பல்லாண்டு கால கடின உழைப்பிற்குப் பிறகு கோழிக்கோட்டில் உள்ள இந்திய நறுமணப்பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தால் புதிய மேம்படுத்தப் பட்ட நாற்று பரம்பரையாக தேர்வு செய்யப்பட்டது. இவற்றுள் தனது பிறவியில் நெகிழ்வுத் தன்மையால் "பிரபா' மாற்றத்தை ஏற்றுக்கொண்டு எல்லா சூழலிலும் தன்மைஉடையதாக, வேளாண் பெருமக்களுக்கு ஏற்ற ரகமாக இருந்து வருகிறது. இது கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் நன்கு விளைகிறது. தற்பொழுது தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிரா ஆகிய மற்ற மாநிலங்களிலும் பரவுகிறது. (**தகவல்: க.கனகதிலீபன், கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு, மயிலாடும்பாறை**).

**வாழை மருத்துவம்**: சராசரி ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்குத் தேவையான பொட்டாசியத்தின் அளவு 1875 மில்லிகிராம் முதல் 5635 மில்லிகிராம் என கணக்கிடப் பட்டுள்ளது. இதை இயற்கையாகப் பெற தினமும் ஒரு சில வாழைப் பழங்களை (குறிப்பாக நேந்திரன் வாழை) சாப்பிடுவதன் மூலம் தேவையான அளவு பொட்டாசியம் கிடைத்துவிடும். இதனால் உயர் ரத்த அழுத்தம் (ஹைப்பர் டென்ஷன்) கட்டுப்படுத்தப் படுகிறது. அதாவது உயர் ரத்த அழுத்தத்தின் போது வெளியேறும் பொட்டாசியம் பற்றாக்குறையை வாழைக் கனிகளில் உள்ள பொட்டாசியம் செறிவு ஈடு செய்கிறது. உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.
இரண்டு வாழைப்பழத்தையும் பாதி பப்பாளி பழத்தையும் துண்டுகளாக்கி அதன்மேல் சிறிது உப்பைத் தூவி, எலுமிச்சம் பழச்சாற்றை ஊற்றி ஊறவைத்து நாள்தோறும் காலை, மாலை இரண்டு வேளை உண்டுவர மலச்சிக்கல் விலகும்.
வாழைக்கனிகளில் பல்வேறு வகைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் பொது குணங்களும் சிறப்பியல்புகளும் உண்டு. குறிப்பாக செவ்வாழை விளையாட்டு வீரர்களுக்கும், நெய் பூவன் குழந்தைகளுக்கானது என்றும், மருத்துவ குணங்களுக்கு சிறந்தது பூவன் என்றும் கருதப்படுகிறது.
வாழை இலையில் சுடச்சுட உணவைப்பரிமாறி சாப்பிடுவதால் அதிலுள்ள பச்சையம் உணவுடன் சேர்ந்து ரத்தத்தில் கலந்து உடல் வெப்பத்தைத் தணிக்கிறது. தோல் நோய்களையும் குணப்படுத்துகிறது.
வாழைத்தண்டை இடித்துச் சாறெடுத்து காலையில் வெறும் வயிற்றில் குடித்துவந்தால் சிறுநீரகக் கல், சிறுநீர்ப்பாதையில் கிருமித்தொற்று ஆகியவை மறையும். (தகவல்: ரெ.அனிதா, சரஸ்வதி,

வேளாண் அறிவியல் மையம், கரூர்-621 313. போன்: 04323-290 666)-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**இயற்கை முறையில் பூச்சி கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2011,00:00 IST

இனக்கவர்ச்சி பொறி என்பது எதிரெதிர் பாலினத்தைச் சேர்ந்த தாய்ப்பூச்சிகளைக் கவர்வதாகும். ஒவ்வோர் பூச்சியும் எதிர் பாலினத்தைக் கவர்ந்து உறவுகொள்ள ஒரு விதமான வாசனையுள்ள ஹார்மோனை வெளியிடும். இந்த வாசனையை நுகர்ந்து ஆண் அல்லது பெண் பூச்சிகள் தங்கள் எதிர் பாலினத்தை நோக்கி வரும். இந்த இயற்கை அடிப்படையைக் கொண்டுதான் இனக்கவர்ச்சி பொறிகள் செயல்படுகின்றன.

இவ்வாறு கவரப்படும் பூச்சிகள் பின்னர் அழிக்கப்படும். இதன்மூலம் முட்டையிடுதல் தவிர்க்கப்படுகிறது. முட்டையிடுதல் தவிர்க்கப்படுவதால் புழுக்கள் உற்பத்தி ஆவது தவிர்க்கப்பட்டு பூச்சி மருந்தின் தேவையும் குறைகிறது. இனக்கவர்ச்சிப் பொறிகள் மூலம் எல்லாவிதமான பூச்சிகளையும் கட்டுப்படுத்த இயலாது. குறிப்பிட்ட பயிர்களில் குறிப்பிட்ட பூச்சிகளை மட்டுமே கட்டுப்படுத்தவல்லது.

கத்தரி தண்டு துளைப்பான், வேர்க்கடலை இலை மற்றும் காய் துளைப்பான், தக்காளி காய் துளைப்பான், நெல் தண்டு துளைப்பான். பொறிகள் வைப்பதால் பூச்சி மருந்தின் தேவை குறைகிறது. ஒரு ஏக்கருக்கு 5-6 பொறிகள் வைத்தால் போதுமானது.

**ஒட்டும் பொறி**: சாறு உறிஞ்சும் பூச்சிகளான கொசு, வெள்ளை ஈ போன்றவற்றைக் கட்டுப்படுத்த இந்த ஒட்டும் பொறி பயன்படுகிறது. ஒரு தகரஷீட்டில் மஞ்சள் பெயின்ட் அடித்து அதன் மேல் மண்ணெண்ணெய் தடவி வயல்களில் வைத்தால் இந்தப்பூச்சிகள் தகர ஷீட்டில் ஒட்டிக்கொள்ளும். வெண்டை, பருத்திப்பயிரில் இது பெரிதும் பயன்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 4-5 பொறிகள் வைத்தால் போதுமானது. இருப்பினும் பூச்சி தாக்குதலுக்கேற்ப பொறிகளின் எண்ணிக்கை மாறலாம்.

**இஞ்சி, பூண்டு, பச்சைமிளகாய் கரைசல்**: தற்போது இயற்கை விவசாயம் பெருமளவில் விவசாயிகளால் பின்பற்றப்பட்டு வருகிறது. இதில் பூச்சிக் கட்டுப்பாடு மிக முக்கிய அங்கம் வகிக்கிறது. இதில் ஒரு எளிமையான முறை ஒன்றை தற்போது காண்போம். இஞ்சி,பூண்டு, பச்சைமிளகாய் கரைசல் என்பது இதன் பெயர்.

பூண்டு ஒரு கிலோ எடுத்து கெரசினில் 12 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்னர் இதனை எடுத்து நல்ல விழுதாக வருமாறு அரைத்துக் கொள்ள வேண்டும். அரை கிலோ பச்சை மிளகாய் மற்றும் அரை கிலோ இஞ்சி எடுத்து தனித்தனியாக விழுது பதத்தில் அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். பின் இவ்வாறு தனித்தனியாக அரைத்த விழுதுகளை நன்றாக கலந்து ஒரு காடா துணியில் வைத்துக்கொள்ள வேண்டும். (ஜிலேபி பிழிவது போல் வைத்துக்கொள்ள வேண்டும்).

இவ்வாறு தயார் செய்த காடா துணியில் வைக்கப்பட்ட கலவையை 6 லிட்டர் தண்ணீரில் முக்கி ரசத்தை வடிக்கவும். இப்போது நமக்கு 6 லிட்டர் கரைசல் தயார்.
இந்த கரைசலை பூச்சி தாக்குதல் குறைவாக இருந்தால் 500 மில்லியும் தாக்குதல் அதிகமாக இருந்தால் 1 லிட்டரும் எடுத்து முறையே 9.5 மற்றும் 9 லிட்டர் தண்ணீரில் கலந்து பூச்சிகள்/செடிகள் மீது தெளித்தால் புழு வகை பூச்சிகள் முற்றிலும் கட்டுப்படுத்தப்படும்.
காதி சோப்பை தண்ணீரில் கரைத்து அடித்தால் அது நாம் அடிக்கும் இயற்கை பூச்சிமருந்து கரைசலை செடியின் மீது ஈர்த்து வைத்துக்கொள்ள உதவும். இதன்மூலம் இக்கரைசலின் வீரியமும் அதிக நேரம் செடியில் இருக்கும். இதை தயார் செய்யும்போது கைக்கு கையுறை தேவை. இல்லையெனில் கை எரிச்சல் அதிகமாக இருக்கும். கவனம் தேவை.**-எம்.அகமது கபீர், தாராபுரம்-638 656. 93607 48542.**

**நான்காவது காலாண்டில் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.8 சதவீதமாக குறைவு**
ஜூன் 01,2011,00:06



புதுடில்லி: நாட்டில் உற்பத்தி துறை சார்ந்த தொழிற்சாலைகளின் மோசமான செயல்பாட்டினால், மொத்த உள்நாட்டு உற்பத்தி, சென்ற மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நான்காவது காலாண்டில், 7.8 சதவீத வளர்ச்சியை பெற்றுள்ளது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டின் இதே காலாண்டில், 9.4 சதவீதமாக இருந்தது.சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 8.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. விவசாய உற்பத்தி பெருக்கம், கட்டுமான தொழில் வளர்ச்சி, நிதித் துறை சார்ந்த நிறுவனங்களின் சிறந்த செயல்பாடு ஆகிய காரணங்களால், மொத்த உள்நாட்டு உற்பத்தி உயர்ந்துள்ளது. அதேசமயம், 2009-10ம் நிதியாண்டில், இதன் வளர்ச்சி 8 சதவீதமாக இருந்தது.மறுமதிப்பீட்டின் படி, சென்ற நிதியாண்டின், முதல் மற்றும் மூன்றாவது காலாண்டுகளில், உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி முறையே, 9.3 மற்றும் 8.3 சதவீதமாக

உயர்ந்துள்ளது. இது, முந்தைய மதிப்பீட்டில் முறையே, 8.9 மற்றும் 8.2 சதவீதமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

**கரும்பில் மஞ்சள் நோய் கட்டுப்படுத்த தோட்டக்கலை உதவி இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2011,01:28 IST

சிறுபாக்கம் : மரவள்ளி மற்றும் கரும்பு பயிர்களில் ஏற்பட்டுள்ள மஞ்சள் நோயைக் கட்டுப்படுத்த பெரசல்பேட் மற்றும் சிங்சல்பேட் பயன்படுத்த வேண்டும் என மங்களூர், நல்லூர் வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குனர் முருகன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மங்களூர், நல்லூர் வட்டார கிராமப்புற விவசாயிகள் பயிரிட்டுள்ள மரவள்ளி மற்றும் கரும்பு பயிர்கள் மஞ்சள் நிறமாக காணப்படுகிறது. கடந்த ஆண்டு இதே நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வேளாண் பேராசிரியர்கள் கள ஆய்வு செய்தனர்.

இந்த நோய்கள் அதிக வெப்பத்தின் காரணமாக இரும்பு சத்து மற்றும் துத்தநாக சத்துக்களின் பற்றாக்குறையால் ஏற்படுகிறது. பருவமழை துவங்கியதும் இந்த நோய் படிப்படியாக குறையும். தற்போது இந்நோயினை கட்டுப்படுத்த பெரசல்பேட் (அன்னபேதி உப்பு) ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் 250 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும். இதேப்போன்று சிங் சல்பேட் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் வீதம், 250 லிட்டரில் கலந்து 15 இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும். பெரசல்பேட், சிங் சல்பேட் ஆகிய நுண்நூட்டச் சத்துக்களை ஒரே சமயத்தில், ஒன்றாக கலந்து தெளிக்கக் கூடாது. தனித்ததனியாக தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நோயினை கட்டுப்படுத்தலாம் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தரமான விதைகளை தேர்வு செய்ய வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2011,02:10 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மானாவாரி சாகுபடியின் போது தரமான விதைகளை பயன்படுத்தி நல்ல மகசூலை பெற வேண்டும்' என, விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜான் லூர்து சேவியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது கோடை மழை பரவலாக

பெய்துள்ளது. இதை பயன்படுத்தி தற்போது மானாவாரி விதைப்புக்கு வயல்கள் உழவு செய்யும் பணி துரிதமாக நடந்து வருகிறது. மானாவாரியில் விதைப்பு செய்யும் சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்களின் விதைகள் தரமானதுதானா என, விவசாயிகள் அறிந்து சாகுபடி மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விதைகளை வாங்கும் முன் அந்த விதைகளுக்கு உரிய முளைப்பு திறன் பகுப்பாய்வறிக்கையினை கேட்டு சரிபார்க்க வேண்டும். விதைகளின் தரத்தை அறிந்து கொள்ள கிருஷ்ணகிரியில் மோகன்ராவ் காலனி முதல் குறுக்குத்தெருவில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் இந்நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக, 30 ரூபாயை செலுத்தி விதைகளின் தரத்தினை அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி வேளாண்மையில் முன்னேற்றம் அடையலாம்.

**"வீரிய ஒட்டு நெல் விதை உற்பத்தி விவசாயிகளுக்கு லாபகரமானது'**

பதிவு செய்த நாள் : மே 31,2011,22:25 IST

கோவை : "வீரிய ஒட்டு நெல் விதை உற்பத்தி, விவசாயிகளுக்கு லாபகரமான தொழில்' என, தமிழ்நாடு வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது., பல்கலை வெளியிட்டுள்ள அறிக்கை: வேளாண் துறை மற்றும் வேளாண் பல்கலை ஆகியவை வீரிய ஒட்டு ரக நெல் விதையை கிலோவுக்கு ரூ. 110 முதல் கொடுத்து கொள்முதல் செய்கின்றன. கடந்த ஆண்டில் சத்தியமங்கலம் பகுதி கிராமங்களில் 2 ஏக்கர் பரப்பளவில் 1,400 கிலோ வீரிய ஒட்டு நெல் மகசூல் கிடைத்தது. தற்போதுள்ள விலைப்படி, இரண்டு ஏக்கருக்கு மொத்தமாக வீரிய ஒட்டு நெல், ஆண் ரகம் மற்றும் வைக்கோல் ஆகியவை மூலம் ரூ.1.88 லட்சம் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

பயிர்சாகுபடிச் செலவு 40 ஆயிரம் போக, நெல் சாகுபடியில் ரூ.1.48 லட்சம் (ஏக்கருக்கு ரூ. 74 ஆயிரம்) கிடைக்க வாய்ப்புள்ளது. பெருகி வரும் மக்கள்தொகை, குறைந்து வரும் சாகுபடி பரப்புகளுக்கு ஏற்ப உற்பத்தித் திறனை பெருக்குவதில் வீரிய ஒட்டு நெல் தொழில்நுட்பம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. மாவட்டத்தில் நெல் பரப்பு குறைந்து நெல் உற்பத்தியானது பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வருகிறது. இதற்கேற்ப வேளாண் பல்கலை குறுகிய கால வீரிய ஒட்டு நெல்லான "கோ.ஆர்.எச்.3.,' என்ற ரகத்தை வெளியிட்டுள்ளது.

இது விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாகும். இந்தியா, நெல் பரப்பளவில் முதலிடம் வகித்தாலும் நெல் உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்த இடத்தில்தான் உள்ளது. இதற்கு காரணம் சீனா, வீரிய ஒட்டு நெல் தொழில்நுட்பத்தை 1976 முதல் கடைபிடித்து வருகிறது. வீரிய ஒட்டு நெல்

தொழில்நுட்பமானது பல்வேறு நுண்ணிய தொழில்நுட்பங்களை தன்னகத்தே கொண்டது. வீரிய ஒட்டு நெல்லானது, ஆண் மலட்டுத் தன்மை கொண்ட பெண் நெல்லையும், ஆண் மலட்டுத் தன்மையை வளமூட்டும் ஆண் ரகத்தை கொண்டும் உருவாக்கப்படுகிறது.

வீரிய ஒட்டு நெல் தொழில்நுட்பம் லாபகரமாக அமைய விதை உற்பத்தித் திறன் முக்கியமானதாகும். இதன் உற்பத்தித் திறனைப் பல காரணிகள் தீர்மானிக்கின்றன. பயிரிட ஏற்ற இடம், பருவம், ஆண், பெண் விதை அளவு, நடவு விகிதம், ஜிப்ராலிக் அமிலம் தெளிக்கும் காலம் மற்றும் அளவு, அயல் மகரந்த சேர்க்கை ஊக்குவிக்கும் பண்பு முதலியனவாகும். மேலும் விபரம் தேவைப்படும் விவசாயிகள், "பேராசிரியர் மற்றும் தலைவர், நெல்துறை, வேளாண் பல்கலை, கோவை - 641 003 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் அல்லது 0422 - 247 4967 என்ற டெலிபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வாழை சாகுபடிக்கு மாறும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : மே 31,2011,22:25 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு மேற்குப் பகுதியில், விவசாயம் செய்வதற்கு, கூலி தொழிலாளர்கள் சரியாக வராததால், விவசாயிகளே வேலை செய்து கொள்ளும் வகையில், வாழை, சாம்பார் வெள்ளரி, மரவள்ளி போன்றவைகளை சாகுபடி செய்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.வாழை தார்களை கேரளாவில் உள்ள வியாபாரிகள் நேராடியாக வந்து, அவர்களுடைய செலவில் வாழையை வெட்டி கதலி வாழைப்பழங்களை கிலோ ஒன்றுக்கு ரூ.16 முதல் ரூ.20 வரை விவசாயிகளுக்கு கொடுத்து எடுத்து கொள்கின்றனர்.

இதேபோல், மரவள்ளியும், சாம்பார் வெள்ளரியும் கேரளா வியாபாரிகள் எடுத்து செல்வதால், கூலி தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. இதற்காக விவசாயிகள் செலவு செய்ய வேண்டியதும் இல்லை. இந்த சாகுபடியினால், விவசாயிகளுக்கு அதிகளவில் லாபம் கிடைக்கிறது. இதனால், இப்பகுதி விவசாயிகள் வாழை சாகுபடியில் இறங்கிவிட்டனர்.

**தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : மே 31,2011,22:10 IST

கோவை : கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலையில், தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடக்கிறது. கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை: வரும் 6ம் தேதி காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை இப்பயிற்சி முகாம் நடக்கிறது. இதில், தேனீ கூட்டங்களை கண்டுபிடித்து வளர்க்கும் முறை மற்றும் சேகரித்து வளர்க்கும் முறை, ராணித் தேனீ உற்பத்தி முறை, இயற்கை எதிரிகள் நிர்வாகம் ஆகியவை குறித்து பயிற்சியளிக்கப் படுகிறது. பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி முகாம் அன்று காலை 9.00 மணிக்குள்ளாக, 150 ரூபாயை நேரடியாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலை கோவை-641003 என்ற முகவரியிலும், 0422-6611214 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

**நெகமம், ஆனைமலையில் கொப்பரை ஏலம்: 73 விவசாயிகள் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : மே 31,2011,22:10 IST

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 63.00 ரூபாய் விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 8 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 18 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் நான்கு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 11 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 58.75 ரூபாய் முதல், அதிகபட்சம் 63.00 ரூபாய் வரை விலை கிடைத்தது.

இரண்டாம் தர கொப்பரை 7 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 45.00 ரூபாய் முதல், அதிகபட்சம் 56.00 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், "வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி இருந்ததால் விலை உயர்ந்து இருந்தது. கடந்த இரண்டு வாரமாக கொப்பரை விலை சரிய துவங்கியுள்ளது.

இதனால் கடந்த வாரம் நிலவரத்திலேயே கொப்பரை ஏலம் விடப்பட்டது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, முதல் தர கொப்பரை விலை கிலோவுக்கு 50 பைசா விலை குறைந்துள்ளது. இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு 6.00 ரூபாய் விலை உயர்ந்துள்ளது' என்றனர். ஆனைமலை: ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 65 பேர் 158 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர்.

கொப்பரையை மூன்று வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) தமிழ்ச்செல்வன் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 99 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 60.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 62.15 ரூபாய் வரை விலை கிடைத்தது.

இரண்டாம் தர கொப்பரை 59 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 55.55 ரூபாய் முதல் அதிகபட்சமாக 58.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், கொப்பரை விலை குறைந்துள்ளது. கடந்த வார விலையுடன் ஒப்பிடும் போது, முதல் தர கொப்பரை கிலோவுக்கு 2 ரூபாய் விலை குறைந்துள்ளது. இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு 1 ரூபாய் விலை குறைந்துள்ளது என்றனர்.

**வரத்து அதிகரிப்பால் பூசணிக்காய் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : மே 31,2011,22:10 IST

பொள்ளாச்சி : தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பொள் ளாச்சி சந்தைக்கு பூசணிக்காய் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு சுற்றுப்பகுதிகளிலிருந்தும், உடுமலை, காங்கேயம், தாராபுரம் ஆகிய பகுதிகளிலிருந்தும் பூசணிக்காய் வரத்துள் ளது. இங்கு வரும் பூசணிக்காயில் 80 சதவீதம் கேரள மாநிலத்திற்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. பருவம் தவறிய மழை, வெயிலின் தாக்கம் ஆகிய காரணங்களால், கடந்த சில மாதங்களாக பூசணிக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டது. தற்போது, விளைச்சல் அபரிமிதமாக உள்ளதால், வெளியிடங்களிலிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு பூசணிக்காய் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது.

காங்கேயம், கரூர், தாராபுரம், உடுமலை சுற்றுப்பகுதிகளிலிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு 10 டன் பூசணிக்காய் வரத்தாக உள்ளது. இங்கு கிராக்கி இல்லாததால், வரத்து முழுவதும் கேரள மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறது. வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் கிலோ பத்து ரூபாய் விற்ற பூசணிக்காய் இம்மாதம் நான்கு ரூபாய்க்கு விற்பனையாகிறது. காந்தி மார்க்கெட் வியாபாரிகள் கூறியதாவது: "சீசன் துவங்கியுள்ளதால்,

சுற்றுப்பகுதிகளிலிருந்தும், தமிழகத்தின் பிறபகுதிகளிலிருந்தும் பூசணிக்காய் வரத்துள்ளது. கேரள வியாபாரிகள் நேரிடையாக வந்து பூசணிக்காயை ஏலம் எடுத்து செல்கின்றனர். இன்னும் இரண்டு மாதங்களுக்கு பூசணிக்காய் வரத்து இருக்கும். விலையில் பெரிதும் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. தற்போதுள்ள விலையே நீடிக்கும் வாய்ப்புள்ளது' என்றனர்.

**பால் உற்பத்தி பெருக்க நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 01,2011,02:37 IST

மதுரை:மதுரை மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்குவதற்கு ஆயிரம் பேருக்கு மானியத்துடன் கடன்கள் வழங்க கலெக்டர் சகாயம் உத்தரவிட்டார்.வங்கியாளர்களுக்கான கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது: கடந்த ஆண்டு வங்கிகள் 2360 கோடி ரூபாய் முன்னுரிமை கடன்கள் வழங்கின. வைப்புத்தொகை கடன் 96 சதவீதம் எட்டி சாதனை படைத்துள்ளது.

இதே போன்று மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்க வங்கிகள், பால் உற்பத்தி தொழில்களுக்கான திட்டத்தில் மானியத்துடன் கூடிய கடன்களை முன்னுரிமை அளித்து கடன் வழங்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்குள் ஆயிரம் நபர்களுக்கு வங்கி கடன் வழங்க வேண்டும். இதனால் 15 ஆயிரம் லிட்டர் பால் கொள்ளுமுதல் கூடும் வாய்ப்பு உள்ளது.

பால் உற்பத்தி தொழில்களுக்கான திட்டத்திற்காக மானியமாக 25 சதவீதம் மத்திய அரசு நபார்டு வங்கி மூலம் வழங்கப்பட உள்ளது, என்றார்.முன்னதாக 20011-12ம் ஆண்டுக்கான வருடாந்திர கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது.கனரா வங்கி துணை பொது மேலாளர் ரங்கராஜ், இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் ராஜன், இந்திய ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் ஜார்ஜ், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சங்கரநாராயணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சாமுவேல் இன்பதுரை உட்பட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி

# சென்ற நிதி ஆண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 23% வளர்ச்சி



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
கொச்சி

சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி ரூபாய் மதிப்பு அடிப்படையில் 23 சதவீதம் அதிகரித்து ரூ.6,840.71 கோடியாக உயர்ந்துள்ளது. அளவின் அடிப்படையில் இது 5 சதவீதம் உயர்ந்து 5,25,750 டன்னாக அதிகரித்துள்ளது. டாலர் மதிப்பு அடிப்படையில் 28 சதவீதம் அதிகரித்து 150.29 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

சென்ற நிதி ஆண்டிற்கு ரூ.5,100 கோடி மதிப்பிற்கு 4.65 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. ஏற்றுமதி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் விஞ்சி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.

சென்ற நிதி ஆண்டில், மிளகாய், பூண்டு, இஞ்சி, நறுமண எண்ணெய் ஆகியவற்றின் ஏற்றுமதி மிகவும் உயர்ந்துள்ளது. மிளகாய் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 18 சதவீதம் அதிகரித்து 2.04 லட்சம் டன்னிலிருந்து 2.40 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, மொத்த நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் 46 சதவீதமாகும். ரூபாய் மதிப்பு அடிப்படையில் மிளகாய் ஏற்றுமதி 19 சதவீதம் உயர்ந்து ரூ.1,291.73 கோடியிலிருந்து ரூ.1,535.54 கோடியாக அதிகரித்துள்ளது.